# உங்கள் புராஸ்டேட்டைப் பற்றி அறிந்துகொள்ளுங்கள்

## ஆண்களுக்கான தகவல்



PROSTATE CANCER UK

Tamil/English

# இந்தச் சிற்றேட்டைப் பற்றி

இந்தச் சிற்றேடு ஆண்களுக்கானது. ஆண்களின் குடும்பத்தவரும் கூட இதன் பயன்பாட்டைக் காணமுடியும்.

ஒரு புராஸ்டேட் என்றால் என்ன, அது என்ன செய்கின்றது, மேலும் புராஸ்டேட் செயல்பாட்டில் என்ன தவறு ஏற்படக்கூடும் என்பதை நாங்கள் விளக்குகின்றோம்.

மேலும் என்ன மாற்றங்களுக்காகக் கவனித்துக் கொள்ளவேண்டும் என்பதையும் உங்களுக்கு ஒரு புராஸ்டேட் பிரச்சனை இருப்பதாக நீங்கள் நினைத்தால் என்ன செய்ய வேண்டும் என்பதையும் கூட நாங்கள் விளக்குகின்றோம்.

# புராஸ்டேட் என்றால் என்ன?

புராஸ்டேட் ஆண்களுக்கு மட்டுமே உள்ளது. இது பொதுவாக அக்குரோட் கொட்டை அளவு மற்றும் வடிவில் இருக்கிறது மற்றும் உங்கள் வயது கூடக்கூட இது பெரிதாக வளரும்.

உங்களது புராஸ்டேட் உங்கள் உடலின் உட்பகுதியில் உள்ளது. அது உங்கள் சிறுநீர்ப்பைக்குக் கீழேயும், நீங்கள் சிறுநீர் கழிக்கின்ற குழாயைச் சுற்றிலும் அமைந்துள்ளது (சிறுநீர் வடிகுழாய்). இது - விந்தணுக்களைச் சுமந்து செல்கின்ற திரவமான - விந்தை உருவாக்குவதற்கு உதவுகின்றது.

## உங்கள் புராஸ்டேட்டில் என்ன தவறு ஏற்படக் கூடும்?

மிகவும் பொதுவான புராஸ்டேட் பிரச்சனைகளாவன:
- ஒரு பெரிதான புராஸ்டேட்
- புராஸ்டேட் அழற்சி
- புராஸ்டேட் கேன்சர்.


சிறுநீர்ப்பை
சிறுநீர்
வடிகுழாய்
ஆணுறுப்பு
புராஸ்டேட்
விதைப்பை

# நான் என்ன மாற்றங்களுக்காகக் கவனிக்க வேண்டும்?

நீங்கள் சிறுநீர் கழிக்கும்போது ஏதேனும் மாற்றங்களைக் கவனித்தால் அல்லது நீங்கள் கீழ்க்கண்ட பிரச்சினைகளைக் கொண்டிருந்தால் - இது உங்கள் புராஸ்டேட்டில் ஒரு பிரச்சனை உள்ளதென்பதைக் காட்டும் ஒரு அறிகுறியாக இருக்கக் கூடும்.

✔ நீங்கள் கொண்டுள்ள பிரச்சினைகளைக் குறியீடு செய்து இந்தச் சிற்றேட்டை உங்கள் மருத்துவர் அல்லது செவிலியரிடம் எடுத்துச் செல்ல இது உதவுவதை நீங்கள் காணலாம்.

கவனிக்க வேண்டிய மாற்றங்களில் அடங்குபவை:

- ☐ குறிப்பாக இரவு நேரத்தில், வழக்கத்தை விட அதிகமாக அடிக்கடி சிறுநீர் கழித்தல்
- ☐ சிறுநீர் கழிக்கத் தொடங்குவதற்குச் சிரமம்
- ☐ சிறுநீர் கழித்தலை நிறைவு செய்வதற்குக் கஷ்டப்படுதல் அல்லது நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளுதல்
- ☐ நீங்கள் சிறுநீர் கழிக்கும் போது ஒரு பலவீனமான ஓட்டம்
- ☐ உங்கள் சிறுநீர்ப்பை இன்னும் சரியாகக் காலியாகவில்லை என்னும் உணர்வு
- ☐ சிறுநீர் கழிக்க உடனடியான தேவை - சில நேரங்களில் கழிப்பறைக்குச் செல்லும் முன்னரே சிறுநீர் ஒழுகுதல்
- ☐ நீங்கள் நிறைவுசெய்த பின்னரும் சிறு சிறு துளிகளாக சிறுநீர் வெளியேறுதல்.

குறைவான பொது மாற்றங்களில் அடங்குபவை:

- ☐ சிறுநீர் கழிக்கும்போது வலி
- ☐ விந்து வெளியேறும்போது வலி
- ☐ சிறுநீர் அல்லது விந்துவில் இரத்தம்
- ☐ விறைப்புத் தன்மையைப் பெறுதலில் அல்லது தக்கவைத்தலில் பிரச்சனைகள்.

சிறுநீர் கழிக்கும் போதான பிரச்சினைகள் வயதான ஆண்களிடம் சாதாரணமாக இருக்கும் மற்றும் இவை எப்போதும் புராஸ்டேட் பிரச்சினையின் அறிகுறியல்ல. நோய்த்தொற்று, நீரிழிவு, அல்லது சில மருந்துகள் போன்ற வேறு உடல்நலப் பிரச்சினைகளாலும் இவை உண்டாகக் கூடும்.

இங்கு நாம் கூறும் மாற்றங்களை நீங்கள் கவனித்தால், உங்கள் மருத்துவர் அல்லது செவிலியரிடம் கூறுக. நீங்கள் எமது சிறப்புச் செவிலியர்களை (Specialist Nurses) 0800 074 8383-இல் அழைத்து, ஒரு மொழிபெயர்ப்பாளருடன் பேசச் சொல்லியும் கேட்கமுடியும். அவற்றிற்காகக் கிடைக்கப்பெறும் சிகிச்சைகள் அல்லது நீங்களே சிறுநீர்ப் பிரச்சினைகளைச் சமாளித்துக்கொள்ளும் வழிமுறைகள் உள்ளன.

# ஒரு பெரிதான புராஸ்டேட் என்றால் என்ன?

உங்களுக்கு வயதாகும்போது புராஸ்டேட் ஆனது அதன் அளவை விடப் பெரிதாகின்றது. இது பெரிதாக்கப்பட்ட புராஸ்டேட் என அழைக்கப்படுகிறது மற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களிடம் இது மிகச் சாதாரணமாக இருப்பது. இதனை, ஆபத்தற்ற புராஸ்டேட்டிக் பெரிதாக்கல் [benign prostatic enlargement (BPE)] அல்லது ஆபத்தற்ற புராஸ்டேட்டிக் ஹைப்பர்பிளாசியா [benign prostatic hyperplasia (BPH)] என உங்கள் மருத்துவர் கூறுவதைக் கேட்கலாம். இது கேன்சர் அல்ல மற்றும் இது நீங்கள் புராஸ்டேட் கேன்சர் பெறுவதற்கான ஆபத்தை மிகுதிப்படுத்தாது.




புராஸ்டேட் பெரிதாக வளர்கையில், அது நீங்கள் சிறுநீர் கழிக்கும் குழாயை அழுத்தி, சிறுநீர் ஓட்டத்தின் வேகத்தைக் குறைக்கவோ அல்லது நிறுத்தவோ முடியும். இதனால் ஏற்படக்கூடியவை:

- நீங்கள் சிறுநீர் கழிக்கும் போது ஒரு பலவீனமான ஓட்டம்
- உங்கள் சிறுநீர்ப்பை இன்னும் சரியாகக் காலியாகவில்லை என்னும் உணர்வு
- சிறுநீர் கழிக்கத் தொடங்குவதற்குச் சிரமம்
- நீங்கள் நிறைவு செய்த பின்னரும் சிறு சிறு துளிகளாக சிறுநீர் வெளியேறுதல்
- குறிப்பாக இரவு நேரத்தில், வழக்கத்தை விட அதிகமாக அடிக்கடி சிறுநீர் கழித்தல்
- சிறுநீர் கழிக்கவேண்டிய திடீர்த் தேவை - சில நேரங்களில் கழிப்பறைக்குச் செல்லும் முன்னரே சிறுநீர் ஒழுகுதல்.

இந்த அறிகுறிகள் அனைத்தும் உங்களுக்கு இல்லாமல் இருக்கலாம், மற்றும் பெரிதான புரோஸ்டேட் உள்ள சில ஆண்களுக்கு அறிகுறிகள் ஏதும் இல்லாமலே இருக்கும். இந்த அறிகுறிகள், குளிர்ப் பருவம், மனக்கவலை, பிற உடல்நலப் பிரச்சினைகள், உங்கள் வாழ்க்கை முறை மற்றும் சில மருந்துகள் போன்ற பிறவற்றாலும் ஏற்படக் கூடும்.

நீங்கள் அருந்துவது, மருந்துகள், அல்லது அறுவை சிகிச்சை போன்றவற்றில் செய்யும் மாற்றங்களால், பெரிதான புரோஸ்டேட் காரணமாக ஏற்படும் அறிகுறிகளுக்குச் சிகிச்சையளிக்க வழிகள் உள்ளன.

# புராஸ்டேட் அழற்சி என்றால் என்ன?

புராஸ்டேட் அழற்சி என்பது புராஸ்டேட்டில் ஏற்படும் ஒரு தொற்று அல்லது அழற்சி (வீக்கம்) ஆகும். இது கேன்சர் அல்ல மற்றும் இது நீங்கள் புராஸ்டேட் கேன்சர் பெறுவதற்கான ஆபத்தை மிகுதிப்படுத்தாது. இது எந்த வயதிலும் ஆண்களைப் பாதிக்கக் கூடும், ஆனால் இது 36 முதல் 50 வயதிற்கிடையிலான ஆண்களிடம் மிகவும் பொதுவாகக் காணப்படுகின்றது.



அறிகுறிகள் ஆணுக்கு ஆண் வேறுபடும் மற்றும் இதில் அடங்குபவை:

- ☐ உங்கள் விரைகள், உங்கள் விரைகளுக்கு இடைப்பட்ட பகுதி மற்றும் பின்புற வழி, அல்லது உங்கள் ஆணுறுப்பின் நுனி ஆகியவற்றில் வலி
- ☐ உங்கள் வயிற்றின் கீழ்ப்பகுதி, இடுப்பு அல்லது முதுகில் வலி
- ☐ சிறுநீர் கழிப்பதில் சிரமம் மற்றும் சிறுநீர்ப்பை சரியாகக் காலியாகாதது போன்ற உணர்வு
- ☐ குறிப்பாக இரவு நேரத்தில் மிக அடிக்கடி அல்லது உடனே சிறுநீர் கழிக்க வேண்டிய தேவை இருத்தல்
- ☐ சிறுநீர் கழிக்கும் போது அல்லது கழித்த பின்னர் வலி அல்லது கூரிய உணர்வு
- ☐ கோல்ஃப் பந்து போன்ற ஒன்றின் மீது நீங்கள் உட்கார்ந்திருக்கும் உணர்வு
- ☐ புணர்ச்சியில் ஆர்வம் இன்மை (குறைவான காம உணர்ச்சி)
- ☐ விறைப்புத் தன்மையைப் பெறுதலில் அல்லது தக்கவைத்தலில் சிரமம், வெளியேற்றத்தின் போதும் பின்னரும் வலி அல்லது எரிச்சல் மற்றும் முன்னரே வெளியேறுதல் - இவை சாதாரணமாக இல்லாவிடினும்.

கடுமையான புராஸ்டேட் அழற்சி, உடல்வெப்ப நிலையில் உயர்வு மற்றும் உடல் வியர்த்தலை ஏற்படுத்தும் மற்றும் நீங்கள் மருத்துவ மனைக்குச் செல்லவும் நேரலாம்.

ஓய்வு, அதிக நீர் பருகுதல் மற்றும் மருந்துகளை உட்கொள்ளல் உட்பட பலவழிகள் புராஸ்டேட் அழற்சியை மேலாண்மை செய்யவும் அல்லது சிகிச்சையளிக்கவும் உதவும்.

# புராஸ்டேட் கேன்சர் என்றால் என்ன?

புராஸ்டேட்டில் ஒரு கட்டி வளரத் தொடங்குகின்ற போது இது ஏற்படுகின்றது.

புராஸ்டேட் கேன்சர் அடிக்கடி மெதுவாக வளர்கிறது, மேலும் அது எப்போதும் எந்தப் பிரச்சனைகளையும் விளைவிக்காமல் இருக்கலாம். ஆனால் சில புராஸ்டேட் கேன்சர் மிக விரைவாக வளர்கிறது. இது பெரும்பாலும் பிரச்சினைகளை உருவாக்கும் மற்றும் அது பரவுவதைத் தடுக்க சிகிச்சையும் தேவைப்படும்.

புராஸ்டேட் கேன்சருக்குப் பல்வேறு சிகிச்சைகள் உள்ளன. சில சிகிச்சைகள் கேன்சரை முழுமையாக நீக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. கேன்சரை முழுமையாக நீக்க முடியவில்லை எனில், அதை நீங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கச் சிகிச்சைகள் உள்ளன.



# புராஸ்டேட் கேன்சர் ஏதேனும் அறிகுறிகள் கொண்டுள்ளதா?

**புராஸ்டேட் கேன்சரின் துவக்கத்தில் பெரும்பாலான ஆன்களுக்கு எந்த அறிகுறிகளும் இருப்பதில்லை.**

ஆனால், சில ஆண்கள் சிறுநீர் கழிக்கச் சிரமப்படுவர். நீங்கள் சிறுநீர் கழிக்கும் முறையில் மாற்றங்களைக் கவனித்தால் (பக்கம் 4 காண்க), பெரிதாக்கப்பட்ட புராஸ்டேட் அல்லது வேறு உடல்நலப் பிரச்சினையின் அறிகுறியாக இருக்கும். ஆனாலும் அவை பற்றி உங்கள் மருத்துவரிடம் கூறுவது ஒரு நல்ல யோசனையாகும்.

உடலின் வேறு பகுதிகளுக்குப் பரவும் புராஸ்டேட் கேன்சர் (முன்னேறிய புராஸ்டேட் கேன்சர்) கீழ்க்கண்ட அறிகுறிகளை உருவாக்கலாம்:

- ☐ முதுகு, இடுப்பு, அல்லது இடுப்பெலும்பில் வலி
- ☐ விறைப்புத் தன்மையைப் பெறுதலில் அல்லது தக்கவைத்தலில் பிரச்சனைகள்
- ☐ சிறுநீர் அல்லது விந்துவில் இரத்தம்
- ☐ காரணம் ஏதுமின்றி உடல் எடை இழத்தல்.

இந்த அறிகுறிகள் பொதுவாகப் புராஸ்டேட் கேன்சர் அல்லாத பிறவற்றால் ஏற்படும். இருப்பினும் உங்கள் மருத்துவரிடம் பேசி, இவற்றிற்கான காரணம் என்ன என அவர் அறிந்து உங்களுக்குச் சரியான சிகிச்சையைக் கிடைக்கப் செய்வது நல்லது.

# நான் புராஸ்டேட் கேன்சரின் அபாயத்தில் உள்ளேனா?

பிரிட்டனில், எட்டு ஆண்களில் ஒருவர் புராஸ்டேட் கேன்சரால் பாதிக்கப்படுகின்றார்.



நீங்கள் பின்வரும் நிலைகளில் இருந்தால் பெரும்பாலும் புராஸ்டேட் கேன்சரால் பாதிக்கப்படும் வாய்ப்பு மிகுதியாக உள்ளது:

50+

**உங்கள் வயது 50 அல்லது மேற்பட்டு இருந்தால்** - வயதாக ஆக உங்கள் அபாயம் அதிகரிக்கிறது.



**உங்கள் தந்தை அல்லது சகோதரர் புராஸ்டேட் கேன்சரால் பாதிக்கப்பட்டிருத்தல்** - உங்கள் தந்தை அல்லது சகோதரர் புராஸ்டேட் கேன்சரால் பாதிக்கப்பட்டிருந்தால் நீங்களும் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு இரண்டரை மடங்கு அதிகம் உள்ளது.



**உங்கள் தாய் அல்லது சகோதரி மார்பகக் கேன்சரால் பாதிக்கப்பட்டிருத்தல்.**

### என்னால் புராஸ்டேட் கேன்சரை வராமல் தடுக்க முடியுமா?

புராஸ்டேட் கேன்சர் வராமல் தடுப்பது எப்படி என்பதை அறிந்தவர் யாருமில்லை, ஆனால் ஒரு ஆரோக்கியமான எடையைக் கொண்டிருப்பது முக்கியமானதாக இருக்கலாம். அதிக எடை கொண்டிருத்தல் அல்லது குண்டாக இருத்தல், ஆகியவை, புராஸ்டேட்டிற்கு வெளியே பரவுவதற்கான அதிக வாய்ப்பைக் கொண்டுள்ள கேன்சரால் நீங்கள் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கின்றது.

# அடுத்து நான் என்ன செய்ய வேண்டும்?

இந்தச் சிற்றேட்டில் நாம் விவாதித்த மாற்றங்களில் எதையேனும் நீங்கள் கவனித்தால் அல்லது நீங்கள் புராஸ்டேட் கேன்சரின் உங்கள் அபாயத்தைக் குறித்து கவலை கொண்டிருந்தால், உங்கள் மருத்துவரைச் சந்திக்கவும். நீங்கள் எமது சிறப்புச் செவிலியர்களை (Specialist Nurses) 0800 074 8383-இல் அழைத்து, ஒரு மொழிபெயர்ப்பாளருடன் பேசச் சொல்லியும் கேட்கமுடியும்.

சிறுநீர்ப் பிரச்சனைகள் பெரும்பாலும் கேன்சர் அல்லாத வேறு ஏதோ காரணத்தால் ஏற்படுகின்றன, மேலும் அவற்றிற்கு உதவக்கூடிய சிகிச்சைகள் உள்ளன. ஆனால் ஏதேனும் அறிகுறிகளைப் பற்றி உங்கள் மருத்துவரிடம் பேசுவது முக்கியம்.

நான் புராஸ்டேட் பற்றிய ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியை பார்த்த பின்னர், நான் எனது மருத்துவரைப் பார்த்தேன் மற்றும் நான் அபாயத்துக்கு ஆளாவேன் என நினைத்தேன்.

ஒரு தனிப்பட்ட அனுபவம்

# எனக்கு ஒரு மருத்துவர் இல்லை எனில் என்ன செய்வது?

உங்கள் குடும்பத்தினரிடம் அல்லது உங்களுக்கு அருகில் வசிக்கும் நண்பர்களிடம் அவர்கள் சந்திக்கச் செல்லும் மருத்துவரைப் பற்றி கேட்க முடியும். அல்லது பின்வரும் இணையதளங்களில் நீங்கள் உங்களுக்கு அருகில் உள்ள மருத்துவரைக் காண முடியும்:

- **www.nhs.uk** இங்கிலாந்தில்
- **www.nhsinform.scot** ஸ்காட்லாந்தில்
- **www.nhsdirect.wales.nhs.uk/language** வேல்ஸில்
- **www.hscni.net** வடக்கு அயர்லாந்தில்.

# உங்கள் மருத்துவரைச் சென்று சந்திப்பதைக் குறித்து கவலையடைந்துள்ளீர்களா?

சில ஆண்கள் சோதனைகள் பெறுவது குறித்து கவலை அல்லது சங்கடம் அடையலாம். ஆனால் அவை மருத்துவரைச் சென்று சந்திப்பதைத் தடுக்க அனுமதிக்க வேண்டாம்.

சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சனையை நீங்கள் கொண்டுள்ளீர்களா என்பதைப் பற்றிய சிறந்த கருத்தை, சோதனைகள் உங்கள் மருத்துவருக்கு வழங்குகின்றன என்பதை நினைவிற்கொள்ளவும். நீங்கள் ஒரு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யும்போது, ஒரு ஆண் மருத்துவரைக் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்ள முடியும்.

# எனது மருத்துவர் என்ன பரிசோதனைகளை மேற்கொள்ளுவார்?

நீங்கள் ஏதேனும் அறிகுறிகளைக் கொண்டுள்ளீர்களா என்று உங்கள் மருத்துவர் கேட்பார், மேலும் அவர் உங்களுக்கு ஒரு புராஸ்டேட் பிரச்சனை உள்ளதா என்பதைக் கண்டறிய ஒரு சில பரிசோதனைகளைச் செய்யலாம்.

## சிறுநீர்ப் பரிசோதனை

உங்கள் பிரச்சனைகளை விளைவித்திருக்கக் கூடிய ஏதேனும் ஒரு தொற்று பற்றிப் பரிசோதிப்பதற்கு உங்கள் மருத்துவர் உங்களின் சிறுநீர் மாதிரியைக் கேட்கலாம்.

## இரத்தப் பரிசோதனை

உங்கள் இரத்தத்தில் உள்ள PSA இன் (புராஸ்டேட் ஸ்பெசிஃபிக் ஆன்டிஜென்) [Prostate specific antigen - PSA] அளவைக் கண்டறிவதற்கு உங்கள் மருத்துவர் ஒரு இரத்தப் பரிசோதனையைச் செய்யக்கூடும். PSA என்பது புராஸ்டேட்டில் ஆக்கப்பட்டுள்ளது. உங்கள் PSA அளவு அதிகம் இருந்தால், உங்கள் புராஸ்டேடில் பிரச்சினை இருக்கலாம்.

நீங்கள் 50 வயதுக்கு மேற்பட்டு இருப்பின், PSA க்கான இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளும் உரிமை உண்டு, மேலும் இதன் நன்மை தீமைகள் பற்றி உங்கள் மருத்துவர் அல்லது செவிலியரிடம் பேசியிருக்க வேண்டும்.

## உடற்பரிசோதனை

பின் தாரை மூலமாக உங்கள் புராஸ்டேட்டை உணரும்படி உங்கள் மருத்துவர் கேட்டுக்கொள்ளலாம். இது ஒரு டிஜிட்டல் ரெக்டல் பரிசோதனை (DRE) [digital rectal examination - DRE] என்று அழைக்கப்படுகின்றது. சில ஆண்கள் இதை சங்கடமாக உணரலாம், ஆனால் இது வலிமிகுந்ததாக இருப்பதில்லை. உங்கள் மருத்துவர் உங்கள் வயிற்றுப் பகுதி மற்றும் ஆணுறுப்பையும் கூடச் சோதிக்கலாம்.

## ஒரு தனிப்பட்டவரின் கதை

**தனது 59 வயதில் புராஸ்டேட் கேன்சர் இருப்பதாகக் கண்டறியப்பட்ட ஏல்லி:**

“DRE பரிசோதனைக்குள்ளாகும் போது நான் என்னால் தாங்கிக்கொள்ளக்கூடிய அசௌகரியத்தைச் சில நொடிகள் உணர்ந்தேன். நான் தோழர்களுக்கு எப்போதும் கூறிக்கொள்வது இதுவே - ஆம், இது அசௌகர்யமானதுதான், மேலும் இது சிறப்பு வாய்ந்தது அல்ல, ஆனால் இது ஒரு சில நொடிகள் உங்கள் வாழ்க்கையைக் காக்கப் போகிறது எனில் இதனுடன் ஒத்துழையுங்கள். சங்கடத்தில் மரிக்க வேண்டாம்.”

# மேலும் தகவல்களை நான் எங்கே அறிந்துகொள்ள முடியும்?

எமது சிறப்புச் செவிலியர்கள் (Specialist Nurses) தொலைபேசி வாயிலாக, ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலம் உங்கள் மொழியிலேயே பேச உங்களுக்கு உதவ முடியும். எண் 0800 074 8383-இல் அழைத்து, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மொழி பற்றி ஆங்கிலத்தில் கூறவும்.

உங்கள் குடும்ப உறுப்பினர் அல்லது நண்பர் ஒருவரை எம்மை அழைக்குமாறு நீங்கள் கேட்க முடியும் மற்றும் உங்களுக்காக அவர்கள் உரையாடலைத் துவக்க முடியும். ஒரு மொழிபெயர்ப்பாளருடன் உங்களை இணைக்க ஒரு சில நிமிடங்களே ஆகும்.

உங்களுக்குத் தேவையான எல்லா வினாக்களையும் நீங்கள் கேட்கவும், அல்லது - இங்குள்ள எமது சிறப்புச் செவிலியர்களுடன் பேசவும். கூட்டாளிகள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களுடனும் நாங்கள் பேச முடியும்.

புராஸ்டேட் பிரச்சினைகள், சிகிச்சைகள் மற்றும் புராஸ்டேட் கேன்சருடன் வாழ்வோர் பற்றிய மேலும் தகவல்களுக்கான இணைப்புகள் ஆகியவற்றையும் நீங்கள் தமிழில் எமது வலைத்தளத்தில் காண முடியும்
**prostatecanceruk.org/other-languages**

# எங்களைப் பற்றி

Prostate Cancer UK ஒரு சாதாரண விருப்பத்தைக் கொண்டுள்ளது: புராஸ்டேட் கேன்சரால் ஆண்கள் இறப்பதை - தடுப்பு, நோயறிதல், சிகிச்சை மற்றும் ஆதரவு ஆகியவற்றின் மேம்படுத்தல்களை ஊக்குவித்தலால் நிறுத்துவது.

Prostate Cancer UK இல் புராஸ்டேட் நோய்களைப் பற்றிய இன்றைய தேதி வரையிலான, நடுநிலையான மற்றும் துல்லியமான உண்மைகளை வழங்குவதற்கு நாங்கள் மிகுந்த கவனம் எடுத்துக்கொள்கின்றோம். நீங்கள் பெற்றுள்ள மருத்துவ ஆலோசனையுடன் இவை சேர்க்கப்பட்டு முடிவுகளை எடுப்பதற்கு உங்களுக்கு உதவும் என்று நாங்கள் நம்புகின்றோம். எங்களது சேவைகள் உங்கள் மருத்துவரால் வழங்கப்பட்ட ஆலோசனைகளைப் பதிலீடு செய்யும் நோக்கம் கொண்டவை அல்ல.

# குறிப்புகள்

# இவர்களுடன் பேசுங்கள் சிறப்புச் செவிலியர்கள்

**0800 074 8383***

**prostatecanceruk.org**

Health & care information you can trust

The Information Standard Certified Member

ஃபேஸ்புக்கில் எங்களை லைக் செய்யுங்கள்: **Prostate Cancer UK**

ட்விட்டரில் எங்களைப் பின்தொடருங்கள்: **@ProstateUK**


© Prostate Cancer UK மே 2018


மீள்பார்வை செய்யப்பட வேண்டியது மே 2021

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும், புதன் கிழமைகளில் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் எங்கள் சிறப்புச் செவிலியர்களை அழைக்கலாம்.

* அழைப்புகள் பயிற்சி நோக்கங்களுக்காக மட்டுமே பதிவுசெய்யப்படுகின்றன. அழைப்பாளர்கள் மற்றும் Prostate Cancer UK.


Prostate Cancer UK என்பது இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் (1005541) மற்றும் ஸ்காட்லாந்தில் (SC039332) பதிவுசெய்யப்பட்ட ஒரு அறக்கட்டளை ஆகும். பதிவுசெய்யப்பட்ட நிறுவன எண் 02653887.

5146 FYP-TAM/MAR19

FSC www.fsc.org MIX Paper from responsible sources FSC® C023802